# ஞானதீபம்.

புத்தகம்—1. | 1893 ௵ ஜை ௴ 1 ௳ | இலக்கம்—6.

மிகவும் விசனப்படத்தக்க காரியங்களிலொன்றாவது, நபிசல்லல்லாகு அலைகிவசல்லமுடைய வமிசத்திலுள்ள சங்கையான சாதாத்துமார்களிலே மிகுதியானவர்கள் இவ்வூர்களில் தங்கள் சுயப்பாஷையான அறபுப்பாஷையைக் கற்றுக்கொள்ள விரும்பாமலும், தங்கள் பாட்டனார் வெளியாக்கிய மார்க்கத்தை விர்த்தி செய்வதற்குத் தக்க இல்முகளிற் றேர்ச்சியடையாமலு மிருப்பதே. இவர்களின் வமிசத்தின் கனத்தோடு, இல்மின் ஒளிவுஞ் சேர்ந்தால் அவர்கள் நக்ஷத்திரங்களைப்போலிலங்குவார்கள். அவர்களில் மிகுதியானவர்கள் ஏது காரணத்தினாலோ இல்மை விரும்பாதிருப்பது அவர்களுக்கும் முஸ்லிம்களெல்லோருக்கும் மிகவும் நஷ்டமான காரியமாயிருக்கின்றது. சரித்திரங்களைப் பார்த்தால் முஆவியா வமிசத்து இராஜாக்களும், அப்பாசியா வமிசத்து இராஜாக்களும் கலீபாக்களாயிருக்கும் காலத்தில் நபிநாயகத்தின் வமிசத்தவர்கள் அந்த இராஜ்ஜாக்களால் கொல்லப்பட்டும், கொடுமைகள்செய்யப்பட்டும், பற்பல ஊர்களுக்குந் துரத்தப்பட்டு மிருந்தாலும் அவர்கள் இல்மிலும் வணக்கத்திலும் மேலிட்டவர்களாகவும், நபிநாயகத்துடையவும் அஸ்ஹாபுமார்களுடையவும் நடக்கைகளைப் பற்றிப்பிடித்தவர்களாகவும் நடந்துவந்திருக்கிறார்கள். அவர்களில்லாதவரையில் முஆவியா வமிசத்து இராஜாக்களின் அக்கிரமங்களினாலும், கொடுமைகளினாலும், மார்க்கத் தவறுதல்களினாலும் நமது மார்க்கத்தின் அடையாளங்கள் தானும், அற்றுப்போவதற்கு இடமாகுமென்று நினைக்கவேண்டியதாயிருக்கின்றது. அப்படிப்பட்டவர்களின் வமிசத்தவர்கள் இவ்வூர்களில் மிகுதியானவர்கள் இல்முகளைத்தேடாதிருப்பது மிகவும் ஆச்சரியத்தையும், விசனத்தையுங் கொடுக்கின்றது. அவர்கள் இனிமேலாவது தங்கள் பாட்டனாரவர்களின் குணத்தையும், நடக்கைகளையும் பற்றிப்பிடித்து நமது மார்க்கத்தை விர்த்திசெய்யத் துணிவார்களென்று நம்புகிறேன்.

குருமார்களே! இந்த ஊர்களிலுள்ள முஸ்லிம்களிற் சிலருடைய நடக்கைகளைப் பார்த்து, நமது மார்க்கத்தைக்கு

றைவு சொல்வது நியாயமலல. நான் தொழுகையின் வணக்கங்களையும். உள்ளமைகளையுஞ் சொலலப்போகிறேன் அதைக்கேட்டபின், எங்கள் வணக்கமோ உங்கள் வணக்கமோ மேன்மையானவையென்று சொலலுங்கள், நமது மார்க்கப்படி தொழுகை என்கிற வணக்கததை நடதது மொளுங்குகளை ஆறு பிரிவாக்கிச் சொல்லுகிறேன்,

முதலாவது, பல பராக்குகளையும் விட்டொழிந்து அல்லாகுத்தாலாவின் சிந்தனையிற் றரித்த கல்பும். இரண்டாவது, நாம் சொல்லும் சொற்களுடையவும், ஓதும் அதுக்காறு முதலியவைகளுடையவும் பொருள்களை விளங்கிய அறிவும். மூன்றாவது, வல்லபத்தையுடைய அல்லாகுத்தாலாவின் வல்லமைகளையும் நமது கீழ்மையையு முணர்ந்த உணர்வும், நாலாவது, அல்லாகுத்தாலாவின் சமுகத்தில் நிற்கிறோமென்கிற அச்சமும். ஐந்தாவது. றகுமானின் கிருபையின் பெயரில் நம்பிக்கைகொண்ட உறுதியும். ஆறாவது, நமது குறைவுகளை எண்ணி டணிவான ஒழுக்கமுமாகிய ஆறும் இந்த வணக்கத்தைப் பூரணமாக்குதற்கு வேண்டியதாயிருக்கின்றன. இந்த ஆறுகாரியங்களையும் விபரித்துச் சொல்லுகிறேன்.

முதலாவது. தொழும்போது வேறு பராக்குகள் எண்ணங்கள் சகலதையும் விட்டொழிந்து வணக்கத்தின் எண்ணமும், சியலும், சொல்லுமாகிய மூன்று மொன்றாய்ச் சேரவேண்டும். அல்லாகுததாலா கலபிலுண்டாகும் 'உதிப்புகள், எண்ணங்கள் யாவையு மறிந்தவன் அவனை வணங்கிறது கல்பே. தொழுகையாவது, அல்லாகுத்தாலாவை நினைக்கிறதும், புகழுகிறதும், கெஞ்சுகிறது மிரக்குகிறதும. அவன் சமுகத்தே நிற்கிறவனாகவும், அவனை முனாஜாத்துச் செய்கிறவனாகவு மவனெதிரே நின்று, நாயனே! என் பாவத்தை மன்னித்தருள். எனக்கு நேர்வழி காட்டியருள். எனக்கு இன்னதைத்தா. இன்னதைச் செய்யென்று மன்றாடிக் கேட்கிறவனாகவும், இவைகளெல்லா மவன் கல்பில் நின்று கிழம்பியதை வெளியிரங்கமாக்கிக்காட்டுஞ் சொற்களைக் கொண்டும், இரிப்புத் தரிப்புகளைக்கொண்டுந் திட்டப்படுத்துவதுமா யிருக்கும். இப்படி கல்பும், சொல்லுஞ் செயலுஞ் சேராமல், கல்பு வேறு எண்ணங்களில் பராக்கானதாய், நாவுஞ் சில உறுப்புகளு முசும்புகிறது மட்டுமாயிருக்குமானால்: அது வணக்கமாயிராது ஆகையால் தொழுகை பூரணமாவதற்குக் கல்பு உளுறாயிருத்தல் வேண்டும். ஆனால் பிக்ஹுடைய உலமாக்கள் தக்பீர்மட்டில் கல்பு வேறு பராக்கை விட்டொழிந்து வணக்கத்தின் சிந்தனையில் தரித்தால் தொழுகை சரியாய்ப் போகுமென்று தீர்ப்புச்செய் திருக்கிறார்கள். வணக்கங்களின் உள்ளமைகளையும், அஸ்றாறுகளையு மறிந்தவர்களாயும், கல்புக்கும் அல்லாகுத்த ஆலாவுக்கு முடைய சம்பந்தங்களை விளங்கினவர்களாயு முள்ள ஆரிபீன்களும், அவுலியாக்களும், குத்துபுமார்களும் தொழுகை முழுவதிலும் வேறு பராக்குகளை விட்டொழிந்து இருக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதைக்குறித்து இமாம் கஸ்ஸாலி றகுமகுல்லாகு சொல்லுகிறார்

கள், புக்கஹாக்களாகிறவர்கள் கொலை முதலிய சுல்தான்களின் ஆக்கினைகளுக்குரிய தீனுடைய வெளியிரங்கமான சட்டங்களுக்கும், வெளியிரங்கமான உறுப்புகளால் செய்யும் அமல்களுக்கும் கட்டுப்பாடு செய்தவர்களல்லாது, உள்ளிரங்கமானவைகளுக்கும் கல்பை நடத்திவைக்கு மொழுங்குகளுக்குஞ் சட்டங்களை ஏற்படுத்தினவர்களல்ல. அவர்கள் நீதிநடததும் பத்வாவின் நோக்கத்தைக்கொண்டே இவ்விதம் தக்பீர்மட்டில் கல்பு உளுறுயிருந்தால் தொழுகை நிறைவேறிப்போகுமென்று சொல்லியிருக்கிறார்களென்று எடுத்துக்காட்டியபின், தொழுகை முழுவதிலும் கல்பு உளுறுயிருக்க வேண்டுமென்று வெகு ஹதீதுகளையும் அத்தாட்சிகளையுங் காட்டியிருக்கிறார்கள் கல்பின் உளுறுவது:—தொழுகையின் றூஹாயிருக்குமென்றும், தக்பீறுடைய நேரத்தில் மட்டும் அந்த றூஹிருப்பதும், தொழுகையின் மற்ற நேரங்களில் றூஹில்லாதிருப்பது மெவ்விதமென்று சொல்லியிருக்கிறார்கள். இமாம் கஸ்ஸாலி றகுமகுல்லாகு அவர்களுடைய கருத்திற்கு ஒற்றுமையாக மற்றும் ஆரிபீன்களுஞ் சொல்லியிருக்கிறார்கள். ஆனல் ளாஹிறுடைய உலமாக்களின் தீர்ப்பின் கருத்தாவது; மனிதர்களில் மிகுதியானவர்கள் துன்யாவின் ஆசைகளிலும் கொழுகுதல்களிலுஞ் சிக்கியிருப்பவர்களானதாலும் தொழுகைக்குச் சென்றவுடனே அவைகளை யெல்லாம் தறித்து விட்டு, கல்பு அல்லாவின் சிந்தனையிற் றரிப்பதற்கு மிகவும் வருத்தமான படியாலும், தக்பீர் மட்டிலாவது கல்பு சுத்தமாயிருக்கவேண்டுமென்றும், அல்லாகுத்தாலா பிழை பொறுக்கிறவனுகவும் கிருபையாளனுகவு மிருப்பதால், தவ்பாவைக்கொண்டு தொழுகையிலுண்டாகிற தவறுகள் குறைவுகள் சகலதையும் பொறுத்து அவனின் தயாளத்தால் வணக்கத்தைக் கபூல் செய்யக்கூடுமென்பதுமே ஆகிலு மிவ்விதமொரு இடம் புக்கஹாக்கள்வைத்திருக்கிறார்களென்று நாம், தக்பீர் மட்டில் நிய்யத்தைச்சீர்ப்படுத்தி,மற்ற நேரங்களில்நமது மனத்தை அது போகும் வழியில் விட்டுவிடக்கூடாது. நாமொவ்வொரு நாளும் தொழும்போது வேறு எண்ணங்களிலும் பராக்குகளிலும் மனஞ் செல்லாதிருக்க நமது கல்பைக் காப்பாற்றத் தெண்டித்து அப்பியாசப்படுத்தி வரவேண்டும். அதில் கவனமும் பிரையாசமு மெடுக்கவேண்டும். தொழாத நேரத்திலும் துன்யாவின் ஆசைகளால் மனத்தைக் கலங்கவிடாமல் சமாதானமாகவும், அமரிக்கையாகவும் வைத்துக்கொள்ள வேண்டும். ஆசையென்கிற புசலால் மனங் கொந்தளித்துப் பொங்கி நிற்பவன் தொழுகையில் எவ்விதம் கல்பை உளுறுக்கிக் கொள்ளப் போகிறுன். இதைக்குறித்துக் கவனிக்க வேண்டிய தாவது:—தொழுகை நேரத்தில் நம்மைப் பராக்கிற்றிருப்பும் காரியங்களிரண்டு. ஒன்று நமக்கு வெளியே யுள்ளவைகள். கண்ணுக்குத்தெரிகிற பொருள்களும், காதிற்குக் கேட்கிற சத்தங்களுமாயிருக்கும். இதற்காகக் கூடுமாஞல் சத்தங்களில்லாதவிடங்களில் தொழுவது நலவாயிருக்கும். கண்ணுச்குத்தெரியும் பொருள்களாலுண்டாகிற பராக்குகளையும் நீக்கத் தெண்டிக்க வேண்டும். ஒரு பொருள் ஒரு எண்ணத்தை உற்பவிக்கச் செய்யும், அது வேறு எண்ணங்களி லிழுத்துவிடும். அதற்காகக் கண்ணைப் பொத்திக்கொள்ளுகிறதும், இருட்டு அறை

கனில் தொழுகிறதும், தொழுமிடத்தில் கருத்தை இழுக்காமல் மதிலுக்கு நெருங்கித் தொழுகிறதும், தொழுமிடத்தில் அலங்காரமான பொருள்களில்லாமலும், விரிப்பில் அழகான வேலைகளில்லாமலுஞ் செய்துக் கொள்வதும் பேணுதலா யிருக்கும். பெரியோர்கள் பார்வை செல்லா திருப்பதற்கு சஜ்தா செய்வதற்கு மட்டும் போதுமான சிறு ஒடுக்க அறைகளைத் தெரிந்து கொள்வார்கள். பள்ளிவாசலுக்குப் போனால் கண்பார்வையை சஜ்தா செய்யுந் தலத்தைவிட்டு நீங்காது தரிப்பித்துக்கொள்வார்கள். தொழுது முடியும்வரையும் வலது புறம் அல்லது இடதுபுற மிருப்பவர்களாரென்று தெரியாதவர்களா யிருப்பார்கள். இரண்டாவது நமது மனத்திலுள்ள எண்ணங்களும் கலக்கங்களுமாயிருக்கும். இவைகளை நீக்குவது துன்யாவின் பராக்குகளி லிருப்பவர்களுக்கு மகா வருத்தம். உலகஆசை கல்பில் வேரூன்றி முளைத்துக் கிளம்பி அடர்ந்திருப்பதை, நினைத்த பொழுது பிடுங்கி ஒரு புறம் வைத்து விட்டு அல்லாகுத்தாலாவின் எண்ணத்தில் கல்பை எவ்விதந் தரிபடுத்தலாம். தொழுகையில் கல்பு எப்படி உருகப்போகிறது? நாமொவ்வொரு நாளும் பிக்றிடவேண்டும். நமது கல்பைக் கொழுகி நிற்கின்றதே இது என்ன? நமது மனத்தைக் கலக்கிக் கொண்டிருக்கிறதே இது என்னவென்றாராயவேண்டும். அதை ஆராய்ந்தறிந்து கொண்டவன் அதின் பெறுமதி நமக்கு இவ்வுலகத்திற்கு எவ்வளவு ஆகிறத்துக் கெவ்வளவென்று மதிக்கவேண்டும். இந்த மதிப்புச் சரியாயிருப்பதற்கு ஒரு கருத்துச் சொல்லுகிறேன். எங்களொவ்வொருவருக்கும் சக்கருத்தும், மவுத்தும் வருவது நிட்சயம். ஸக்ருத்தாவது;—இந்த துன்யாவுக்கும் ஆகிறத்துக்கு மிடையேயுள்ள வாசலாயிருக்கும். அந்த வாசலுக்கு நாங்கள் வந்தபொழுது எங்களுடைய சென்றுபோன ஹயாத்தையும் வாழ்வையும் எங்களுக்கு எவ்விதந்தோற்றும். ஒரு சொற்பனத்தைப் போலாயிருக்கும். அந்த நேரத்தில் நாமிப்பொழுது மிகவு மாவலாய்த்தேடும் பொருள்களுக்கும் தரிபாடா யிருக்குமென்று நினைத்த வஸ்துக்களுக்கு மென்ன பெறுமதி கொடுப்போம்? இவைகளெல்லாம் நம்மை மருட்டி எங்களை மோசம்செய்த சத்துருவாய் நினைப்போம். அந்த ஸக்ருதை நினைத்து அந்த நேரத்திலுண்டாகப்போகிற எண்ணத்தை இப்பொழுதே, நாமெடுத்துக் கொண்டோமேயானால் ஜயம் பெற்றவர்களாகி விடுவோம். நாம் துன்யாவின் பெறுமதியைச் சரியாய மதிக்கிறவர்களாகி விடுவோம். நம்மை அடிமையாக்கிக்கொண்டிருக்கிற துன்யாவை நாம்அடிமையாக்கிக் கொள்வோம். கல்பை அல்லாகுத்தாலாவுக்குச் சொந்தமாக்கி விடுவோம். கவனங்கள் கலக்கங்கள் நீங்கி, மனச் சமாதானமும் அமரிக்கையுமுடையவர்களாகி விடுவோம். இமாம் கஸ்ஸாலி றகுமகுல்லாகு சொல்லுகிறார்கள்.

ஒருவன் துன்யாவைஆசை வைத்தானேயானால் தொழுகையில் அல்லாகுத்தாலாவின முனாஜாத்தின் இன்பத்தை அனுபவிக்கமாட்டான். துன்யாவைக்கொண்டு சந்தோஷம் பெறுகிறவன், அல்லாகுத்தாலாவைக்கொண்டு மவன் முனாஜாத்தைக் கொண்டும் சந்தோஷ

ம் பெறமாட்டான். ஆகையால் நாம்துன்யாவி ஹைசகளேயும், ஈமது நபுஸின்ஷகுவத்துகளேயு மொடுக்கிவரவர தொழுகையில் கல்பு உளூருகிவரும். தொழுகையில் கல்பு உளூருகிவர உலக ஆசைகளும் சகுவத்துகளும் மொடுங்கிவரும். தன் கல்பை துன்யாவுக்கு ஒப்புக்கொடுத்து தொழுகையில் கல்பு உளூருகாதவர்களுக்குத் தொழுகையின் பலன்கிடைக்க வழியில்லே. அப்படித் தொழுகையின் பலன் கிடையாதவர்கள் தான் எவ்வளவுகாலம் தொழுதாலும் அவர்கள் குணங்களும் நடக்கைகளும் வேறுவிதப்படாம லிருக்கிறது. சிலரிதற்கு இவ்விதம் துன்யாவிஹைசயைக்குறைக்கவும், ஆகிறத்தின் கருத்தையதிகப்படுத்தவு மெவருக்கும் முடியுமா? இது பெரியோர்களுடைய குணமும் நடக்கையுமல்லவாவென்று சொல்வார்கள். அதற்கு நான் சொல்லுகிறதாவது:—நமது சரீயத்து ஒன்றல்லாமல் இரண்டல்ல, சீமானுககு வேறும், எழியவனுக்கு வேறும், வியாபாரிக்கு வேறும், இரப்பானுக்கு வேறுமில்லே. நல்வழி யொன்றே யல்லாது இரண்டில்லே நமது வணககங்க ளெல்லாவற்றுக்கும் அடித்தாளம் நபிசல்லல்லாகு அலேகிவஸல்லம் துன்யாவாகிறது ஆகிறத்துக்குப்பயிர்செய்யும் தலமாயிருக்குமென்று சொல்லிய அதீதாயிருக்கும். சீமான்களாயிருந்தாலும், எழியவர்களா யிருந்தாலும், மடையர்களாயிருந்தாலும், அறிவாளிர்களாயிருந்தாலும் இந்த ஹதிதைக்கைவிட்டவன் ஹலாக்காய்ப் போய்விடுவான் இதைத் தன் அமல்களுக்கெல்லாம் அடித்தாளமாக்கிக் கொண்டவன்ஜயமடைவான். ஆனல் இந்த நல்வழியி லேறிப்போவதிற் பல மறுத்தபாக்களுண்டு அவனவனுடைய இல்முக்கும்தெண்டிப்புக்கும் தக்க மறுத்தபாகளேப்பெற்றுக் கொள்வான், கல்பின் உளூறு மிதுபோலவே.

இரண்டாவது, நாம் தொழுகையிற் சொல்லும் சொற்கள், ஓதும் அதுக்காறுகள் சகலதும் விளங்கியிருக்க வேண்டும், வணக்கமாவது கல்பு கொண்டாயிருக்கும். ஒரு மனிதன் விளங்காமற் சொல்லுஞ்சொல், உறக்கத்தில் புலம்புவது போலும், மஸ்துடையவன் வாய்க்கு வந்தபடி பேசுவதுபோலுமா யிருக்கும். இவர்கள் பேச்சுக்கும் கல்புக்கும் சேர்த்திக்கை யில்லாதது போலவே விளங்காத சொற்களேத் தொழுகையிற் சொல்லுகிறதா யிருக்கும். ஆகையால் நாம் ஓதும் ஓதல்களின் பொருளறிய அறபுப்பாஷை யறிந்திருப்பது தேளவையாயிருக்கின்றது. அந்தப் பாஷையைக் கற்றுக்கொள்ளாதவர்கள் தொழும்பொழுது ஓதுகிற அதுக்காறுகளின் பொருள்கள் மட்டிலாவது படித்துக்கொள்வது அவசியம். ஒஸ்தாதுமார்கள், உலமாக்கள், கத்திபுமார்கள் முதலியவர்கள் இவ்விஷயத்தில் தெண்டிப்பது அவர்களுக்குக்கடமையா யிருக்கும் பள்ளிவாசல்களில் ஒவ்வொரு நாளும் சிலநேரத்தில் தொழுகையின் பறுழுஷறுத்துகளேயும், அவைகளின் ஒழுக்கங்களேயும், அவைகளின் அஸ்ருருகளேயும, அதுக்காறுகளின் பொருள்களேயும விளக்கிக் காட்டுவதை வழக்கமாக்கிவந்தா லிந்தக்குறைவு அற்றுப்போகும. நமது உலமாக்களும கத்திபுமார்களு மிவ்விஷயததிற் கருத்தைச் செலுத்துவார்க ளென்று நமபியிருக்கிறேன். சில கத்திபுமார்கள் அறபிற் சொல்லும சொற்களுடையவும, ஓதும துஆக்களுடையவும் பொருள்கள் தெ

ரியாதவர்களாயிருக்க, இமாமத்துச் செய்கிறார்கள். இமாமுக்கும் தாம் சொல்லுகிற தின்னதென்றும், தாம் கேட்கிற துஆ இன்னதென்றும் விளங்காமலும் மஉமூம்களுக்கும் ஒன்றும் விளங்காமலும் அறபுப்பாஷையிற் சில வசனங்களைச் சொல்லுவது, எவ்விதம் வணக்கமாகுமென்றெனக்கு விளங்கவில்லை.

சொற்களின் பொருள்கள் தெரிந்திருப்பது மல்லாமல், அந்தப்பொருளின் கருத்து கல்பைக் கொழுகவேண்டும். நாமொரு மனிதனை நல்ல மனிதனென்று சொன்னால், அவனுடைய நலவுகளை நினைத்து நல்லவனென்று சொல்வோம். ஒரு மனிதனைச் சமர்த்தனென்று சொன்னாலவனுடைய சமர்த்துகள் கருத்திற்குவந்து சமர்த்தனென்று புகழ்வோம். அதுபோலவே நாம், அல்லாகு அக்பர் அல்லா பெரியவனென்று சொல்லும்பொழுது அவனுடைய வல்லபத்தையும் மகத்துவத்தையும் நினைத்து, அல்லாகு அக்பறென்று புகழவேண்டும். அல்ஹம்துலில்லா, புகழெல்லாம் அல்லாவுக்கென்று மொழியும்போது அவனுடைய அநந்த கிருமத்துகளையும், கிருபை கடாக்ஷத்தையும் நினைத்து அவனுக்கு அல்ஹம்துலில்லாவென்று துதிகூறவேண்டும். இகுபிர்துநூபி என் பாவத்தைப் பொறுத்தருளென்று சொல்லும்பொழுது, நமது பாவத்தை நினைத்துக் கெஞ்சுங் கல்பாக என் பாவததைப் பொறுத்தருளென்று சொல்லவேண்டும். இவ்விதம் கல்பும் நாவும் சேர்ந்து ஓதுவதுதான் வணக்கம. இவ விஷயத்தில் கத்திபுமார்களும, பொருள் விளங்கியவர்களிற் சிலர் தானும் கவனயீனமாயிருப்பது அவர் கழோதுவதிலவிளங்குகின்றது. துஆக்க ளோதும்போது சிலர் ஒருமணி நேரத்தில் நாற்பது மைல் ஓடுகின்ற றேல்வையின் வீசையாய் ஓதுவதைக் கேட்டிருக்கிறேன். அப்படி யோதுவதினால் அவர்களோதும்போது சொல்லுகின்ற சொல்லின் பொருளுடைய கருத்து, கல்பில் ஹாளிருவதற் கிடமில்லை. இமாம் கஸ்ஸாலி றகுமகுல்லாகு தொழுகையிலோதும் ஓதல்களின் பொருள் ஹாளிருவது போதாது. அவைகளின் கருத்து ஹாளிருக வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். பொருளிலும் அதின் கருத்திலும் கவனக்குறைவா யிருப்பதற்கு அத்தாட்சி, துஆக்க ளோதும்போது ஓதுகிறவர்கள் மூச்சு விடுதற்கு நிறுதகியவுடனே கேட்பவர்கள் பொருளை நோக்காமல் ஆமீனென்று கூறப்படுகிறது. துஆவில் நான் பாவத்தில் மூழ்கியிருக்கிறேன் அல்லது இபுலீஸ் என்னை மருட்டிவருகிறானென்கிற வசனத்தி லோதுகிறவர்கள் நிறுத்தினால், உடனே கேட்பவர்களெல்லாம் ஆமீனுமீன் என்று சொல்லப்படுகிறது. இவைகளெல்லாம் பொருள் விளங்காதுகொண்டு நடந்துவருவதால் உலமாக்கள் இவைகளில் கருத்தைச் செலுத்துவார்களென்றும், விளங்காத பாஷையில் துஆக் கேட்பதில் நின்றும் கல்பில் பயபக்தி யுண்டாக்கத்தக்கதாய், விளங்கும் பாஷையிலோதுவதைத் தெரிந்து கொள்வார்களென்றும் நம்பியிருக்கிறேன்.

மூன்றாவது, நாம் நிற்கிறது வல்லபத்தையுடைய நாயனுடைய சமூகத்திலென்ற எண்ணம் கல்பிலுண்டாயிருக்கிறது. ஒருவன் கல்பு உளூருகவும்ஒதும் அதுக்காறுடைய பொருள்கள் விளங்கியு மிருந்தால் அல்லாகுத்தாலாவு

டைய மகத்துவத்தின் உணர்வு, கல்பி ல் கொழுகி நிற்கும்.

நாலாவது, அல்லாகுத்தாலாவின் ச முகத்தில் நிற்கிறோமென்ற அச்சம். இ து அல்லாகுத்தாலாவுடைய குதறத்து ம், தத்துவமும் மனத்தி லமைந்தவுட னே உண்டாகும் அச்சமாயிருக்கும். து ன்யாவிலொரு இராஜன் சமீபத்தில் நி ற்கும்பொழுது, எவ்வளவு அச்சமும் பயங்கரமு முண்டாகின்றன. குன் எ ன்கிற சொல்லைக்கொண்டு யாவையுமு ண்டாக்கிய வல்லமையுடைய அல்லா சுபுஹான கூவத்தாலாவின் சமுகத்தில் நிற்கிறோமென்ற எண்ணம், சக்குச் சந் தாபமில்லாமல் கல்பிலிருந்தால் அச்ச முண்டாகா திருக்கக்கூடுமோ? இல்மு அ திகப்பட அதிகப்பட அச்சமு மதிகப்ப டும், அல்லாகுத்தாலாவைப் பற்றிய அ ச்சத்தைக் குறித்து இமாம் கஸ்ஸாலிற குமகுல்லாகு சொல்லுகிறார்கள்; சகல பாக்கியங்களிலும் உயர்த்தியாவது அல் லாகுத்தாலாவின் லிக்காவின் தரிசனையு ம்அவனை முடுகிறதுமாயிருக்கும். அதற் குதவியான காரியங்களெல்லாம் உயர்த் தியானவைகளா யிருக்கும் ஆகிறத்தில் அல்லாகுத்தாலாவின் தரிசனை கிடைக் காது துன்யாவிலிருக்கும்பொழுது அவ னை யுவந்து, அவனோடு ஊடாட்டமா யிருந்தாலே யல்லாமல், அவனின் பெ யரில் உவப்புண்டாகாது அவனை யறிந் தாலல்லாமல் அவனை யறியக்கூடாது. அவனை எவ்வேளையும் மிக்றிடாமல் அ வனை யறியக்கூடாது. துன்யாவின் ஆசைகளை கல்பை விட்டுத்தறிக்காமலும் துன்யாவின் ஆவலகளை தறிக்கக்கூடா து அவைகளின் இன்பங்களைத் தள்ளா மலும், அந்த இன்பங்களைத் தள்ளக்கூ டாது. அவைகளின் தேட்டத்தைக் கீ ழ்ப்படுத்தாமல், அந்தத் தேட்டங்களை யற்றுவிக்கக் கூடாது. அச்சமென்கிற நெருப்பைக்கொண்டு ஷகுவத்துகளை ச் சுட்டழிக்காமல், ஆகையா ல் தொழுகை நிரப்பமாகுதற்கு அ ல்லாகுததாலாவின் அச்சமிருக்க வே ண்டும்.

ஐந்தாவது, அல்லாகுததாலாவின் கி ருபையின் பெயரில் நம்பிக்கை வைக்கி றது. நாம் அல்லாகுத்தாலா பிழைபொ றுக்கிறவனென்றும், கிருபையாள னெ ன்றும் அவனடியார்களுக்குக் கொடுக் கும் நிகுமத்துகளுக்கு மட்டுத்திட்ட மி ல்லையென்றுந் தெரிந்தவனாகவும், அவ னால் கிடைக்கும் பேறை ஆசித்தவனா கவும் நம்பிக்கை வைக்கிறது.

ஆறாவது, நமது குறைவுகளை நினைந் து மனத்தாழ்மையுடன் தொழுகிறது நம்முடைய பெலவீனத்தையும், நமது பாவங்களையும், நமது குறைவுகளையும் நினைத்து மனத்தாழ்மை கொள்ளு கிறது.

மேலே சொல்லிய ஆறுகாரியங்களு ம் தொழுகைக்கு வேண்டியதா யிருக் கின்றன. அல்லாகுத்தாலா வெளியிர ங்கமான சியலைப் பார்க்கிறவனல்ல, க ல்பைப் பார்க்கிறவனாயிருக்கும். நாம் நமது கல்பில் மேலேசொல்லிய குண ங்களுண்டாவதற்குத் தெண்டித்து அ ப்பியாசப்படுத்தி வரவேண்டும். அந்த அப்பியாசத்துக்கு உதவியாக துன்யா வின் மருட்டுதல்களை விட்டும் பேணி ா டக்க வேண்டும்.

தொழுகையின் சில விவரங்களைப் பேசப் போகிறேன், முஅத்தின் வா

ங்குசொல்லி அழைக்கும்போது. கியாமத்தில் அல்லாகுத்தாலாவின் நீதிக்கு அழைக்கப்படுவதைக் கல்பி லுற்பத்தியாக்கிக் கொள்ளவேண்டும். வாங்கைக் கேட்டவுடனே கல்பில் சந்தோஷங் கொண்டு விரைந்து கொள்ளுகிறவன் மகுஷறில் சோபனங்கூறி அழைக்கப்படுவான். ஒருவன் தன் கல்பில் வாங்கு சொல்லும்போது சந்தோஷமுற்பத்தியானால், ஆகிறத்தின் அழைப்பில் சந்தோஷமா யழைக்கப்படுவா னென்பதற்கு அடையாளமா யிருக்கும்.

ஒழுச்செய்தல் இதைக்குறித்து முன் சொல்லியிருக்கிறேன். உறுப்புகளைக் கழுவுதல் மட்டுமல்ல, செய்த குற்றங்களைக்குறித்து கல்பை, தவ்பாவைக்கொண்டும் விசனத்தைக்கொண்டும் துய்தாக்கி இனிமே லிப்படிப்பட்ட குற்றங்களைச் செய்யாமல் கல்பைத் துப்பரவாய் வைத்துக் கொள்வேனென்று மனத்திற் றீர்மானம் பண்ணிக் கொள்ளுதல்-

சரீரத்தில் மறைக்கவேண்டிய மட்டை உடைகளைக்கொண்டு மறைத்துக் கொள்ளுகிறோம். அல்லாகுத்தாலா எங்களுடைய உள்ளிரங்கத்திலும், அந்தரங்கத்திலுமுள்ள பளிப்பானவைகளையெல்லாம் தெரிந்தவனானபடியால், அந்தப் பழிப்பானவைகளை வெட்கமென்கிற உடையைக்கொண்டும்அச்சமென்கிறபோர்வையைக்கொண்டும் மூடிக்கொண்டு, கூச்சமும் பயமுங் கொண்டவனாய் எசமானின் சமுகத்தில் தலைகவிழ்ந்தவனாய் நிற்கவேண்டும். கிபுலாவை முன்னோக்குதலின் கருத்தாவது:—நாங்கள் மற்றும் திசைகளெல்லாவற்றையும் விட்டு கஉபத்துல்லாவை முன்னோக்கிறதுபோல், எங்கள் சகல அலுவல்களையும் எண்ணங்களையும் விட்டு அல்லாகுத்தாலாவை முன்னோக்குதலா யிருக்கும. நபிசல்லல்லாகு அலைகிவசலலம் ஒரு அடிமை தொழுகையில தரித்தபொழுது அவனுடைய ஆசையையும முகத்தையும கல்பையும, அல்லாகுத்தாலாவுக்குச் சொந்தமாக்கினனே யானல், அவன் தன் தாய் வயிற்றிலிருந்து பிறந்த பாலனைப்போல் தொழுகையை விட்டு நீங்குவானென்று திருவுளம் பற்றி யிருக்கிறார்கள்.

நிலையில தரிப்பவன் நேரேநின்று தலை கவிழ்ந்து நிற்பது அலலாகுத்தாலா கியாமத்து நாளையில கேள்விகணக்குச்காக நிறுத்தப்படுவது போலாயிருக்கும். நாமவன் சமுகத்தில நிற்கிறோன்ற எண்ணங் கொண்டவனாய் நிற்குதல.

நிய்யத்தென்பது, நான் அலலாகுத்தாலாவுடைய கட்டளைக்கு அடிபணிந்தேன். அவன் ஏவிய தொழுகையைத் தொடங்கி நிறைவேற்றப் போகிறேனென்ற நாட்டமும், அவனுடைய தவாபில நமபிக்கையும, அவனுடைய ஆக்கினைக்கு அச்சமும், அவனை முடுகும தேட்டமும மனத்தில திட்டமாக்கி அலலாகுத்தாலாவின் சமுகத்தி லாகிவிட்டேனென்ற எண்ண முண்டானபொழுது வெட்கத்தினுல நெற்றி வெயர்த்துவிடும. அச்சத்தினல சரீரம நடுங்கிவிடும. முகம பேதலித்து விடும. இவைகளெலலாம தொழுகையின் உள்ளமைகளை யறிந்து தொழுகிறவர்களுக்கே யுண்டாகும்,